மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் (DTCP) தருமபுரி மாவட்டம்

தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிபட்டி வட்டம் மற்றும் ஊராட்சி ஒன்றியம், அபபள்ளிபட்டி ஊராட்சி மற்றும் கிராம சர்வே எண்: **6/1A2, 6/1B3, 6/5B** மற்றும் **6/6** ஆகியவற்றில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.(திட்டமில்லா பகுதி)

இணையதள விண்ணப்ப எண் : **PGKXMT3K**

அளவு : 1 செ.மீ : 4 மீ (அலகுகள் மீட்டரில்)

வ

குறிப்பு:

மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு : 0.81.05 ஹெக்டேர் (அ) 8105.00 சதுர மீட்டர்

ஒதுக்கிய மனைகள் : 49

மனைப்பிரிவின் எல்லை

நிலையிலுள்ள சாலை அனுகு சாலை

I) பொது ஒதுக்கீடுகள் : (உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டது):

i) மனைப்பிரிவின் சாலை மற்றும் மூலைமுடக்குகளின் பரப்பு : 2230.07 ச.மீ

III) பூங்கா **(OSR)**

i) ஒதுக்கப்பட வேண்டிய பூங்கா பரப்பு : (8105.00 - 2230.07 = 5874.93) x 10/100 = 587.49 ச.மீ

ii) ஒதுக்கப்பட்ட பூங்கா பரப்பு : பூங்காவின் பரப்பு: 587.49 ச.மீ(10.00 %) (பூங்கா பராமரிப்பு சுடான அரசு வழிகாட்டி மதிப்புத் தொகை மனுதாரரால் முழுமையாக செலுத்தப்பட்டுள்ளது.)

III) பொது உபயோகம்:

A) LOCALBODY -க்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு } மனைப்பிரிவு பரப்பு - மனைப்பிரிவு சாலை பரப்பு x (0.5/100)
(8105.00 - 2230.07 = 5874.93) x 0.5/100 =29.37 சதுர.மீட்டர்

ஒதுக்கப்பட்ட பரப்பு : 36.60சதுர.மீட்டர் (0.62 %)

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு தானமாக ஒப்படைக்கப்பட்டது):

B) TANGEDCO -க்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு } மனைப்பிரிவு பரப்பு - மனைப்பிரிவு சாலை பரப்பு x (0.5/100)
(8105.00 - 2230.07 = 5874.93) x 0.5/100 =29.37 சதுரமீட்டர்

ஒதுக்கப்பட்ட பரப்பு : 34.50சதுர.மீட்டர் (0.59 %)

கட்டட வரம்பு :

9.00 மீ வரை அகல உள்ள சாலைகளுக்கு 1.50 மீ விடப்படல் வேண்டும்.

9.00 மீக்கு மேல் 18.00 மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 3.00 மீ விடப்படல் வேண்டும்.

மூலை முடக்கு:

12.00 மீ வரை அகல உள்ள சாலைகளுக்கு 1.50 மீ x 1.50 மீ விடப்படல் வேண்டும்.

12.00 மீக்கு மேல் 30.00 மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 4.50 மீ x 4.50 மீ விடப்படல் வேண்டும்.

நிபந்தனைகள்:

1.அரசாணை எண்:181 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்:09.12.2020-ல் தெரிவுத்துள்ளவாறு சாலைகள், மழைநீர் வடிகால் வசதி, மேல்நிலை நீர்தேக்க தொட்டியுடன் கூடிய குடிநீர் வசதிகள் மற்றும் தெருவிளக்குகள் ஆகியவை உள்ளாட்சியின் விருப்பத்திற்கு ஏற்ப அமைக்கப்பட்ட பின்னர் இறுதி ஒப்புதல் வழங்கபடல் வேண்டும்.

2.அரசாணை எண்:141 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்:16.07.2022-ன் படி நடவடிக்கை மேற்கொள்ளபட வேண்டும்.

3.இம்மனைப்பிரிவிற்கு ஊராட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தில் எந்த துறையாலும் நில ஆழ்நீர நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பபவில்லை என்றும், சம்மந்தப்பட்ட உள்ளாட்சி உறுதி செய்படு கொள்ள வேண்டும்.

4.நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைபிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன் அறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.

5.விற்பனைக்கு உண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வரைட நகலோடு நகர் ஊரமைப்பு துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கபட வேண்டும்.

6.நகர் ஊரமைப்புத்துறை சட்டபூர்வமாக தொழில் நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள உரிமையை உறுதிபடுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்பித்த ஆவணங்களில் (கிரயப்பத்திரம் - குத்தகை பத்திரம் பட்டா- தானப்பத்திரம் - பொது அதிகார பத்திரம்) மேலும் பல விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனிமாக உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும்.மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் நிரூபுகொள்ளலாம். இதனை முழுவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

7.ஒப்புதல் அளிக்கப்பட்ட மனை பிரிவு வரைபடத்தை எந்தவித மாற்றம் / விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் **60** செ.மீ X **120** செ.மீ அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்குதெரிந்தவாறு பிரகாசிக்கப்பட வேண்டும்.

8.உத்தேச மனைப்பிரிவு சாலைகளுக்கு மனுதாரரால் தார் சாலை அமைக்கப்பட்டு (**BDO/UE**) செயல் அலுவலர் / பூஜியன் பொறியாளர் / நகராட்சி பொறியாளர் அவர்களிடம் தரம் குறித்து தகுதிச் சான்று பெறப்பட்ட பின்னர் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

9.பிரஸ்தாப மனைப்பிரிவுக்கு இவ்வலுலகத்தால் தொழில் நுட்ப ஒப்புதல் மட்டுமே வழங்கப்படுகிறது. மனுதாரரின் நில உரிமத்தினை உறுதி செய்த பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கபடல் வேண்டும்.

10.பிரஸ்தாப மனைப்பிரிவு அமையும் இடம் குறித்து நீதிமன்ற வழக்கு ஏதும் நிலுவையில் உள்ளது அறியப்படின் இவ்வுத்தரவு செல்லத்தக்கதல்ல.

11.மனைப்பிரிவை சுற்றி சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டிருப்பின் அதனை அகற்றி அருகிலிருக்கும் இடத்திற்கு இணைப்பு பாதை அமையும் வகையில் சுற்றுச்சுவர் இறுதியு அப்புறபடுத்தபட வேண்டும்.

12.மனைப்பிரிவின் ஊடே செல்லும் நிலவழிபாதைக்கு பாதிப்பு ஏற்படாத வண்ணம் மனைப்பிரிவு அமைக்கப்பட வேண்டும் இதனை உள்ளாட்சி உறுதி செய்தல் வேண்டும்.


13.பிரஸ்தாப மனை அமையும் இடம் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவின் பொது ஒதுக்கீடு பகுதியில் அமையுமாயின் இவ்வுதரவு செல்லத்தக்கதல்ல.

14.மனைபிரிவிற்கு **RERA** அனுமதி பெற்ற பின்னரே மனைகளை விற்பனை செய்ய வேண்டும்.

15.மனைப்பிரிவின் ஊடே செல்லும் மின்கம்பி பாதையை புதியதாக அமையும் சாலை அமைப்பிற்கு ஏற்றவாறு மாற்றி அமைக்க வேண்டும்.

SWP/DTCP/DHARMAPURI /LAYOUT APPROVAL NO : 136/2025

உதவி இயக்குநர், (மு.கூ.பொ)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
தருமபுரி மாவட்டம்.



அளவர்/உதவி வரைவாளர்

லோ.வனிதா
வரைவுவல்லுனர்-III

சா.பத்மநாபன்
மேற்பார்வையாளர்/ வரைவாளர் நிலை-II